அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/92

அரசாங்க நிருவாக, மாகாண
சபைகள், உள்நாட்டு அலுவல்கள்
அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07
1992.05.21.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்,
பகுதிச் செயலாளர்கள்,
உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.

## மக்கள்பால் நிருவாகத்தை எடுத்துச் செல்லல்

அரசாங்கப் பணிகள் உள்ளூர் மட்டத்துக்கு மேலும் பன்முகப்படுத்தப்படுவதை எய்துவதற்காக அரசாங்கம் பகுதி மட்டத்தில் நிருவாக அமைப்பு ஒன்றை விருத்தி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. இப்புதிய நிருவாக முறைமையின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதாகும்.

(அ) மக்கள் தாம் தெரிந்தெடுத்த தமது உள்ளூர் அதிகார பீடங்களினூடாக முன்னுரிமை வழங்கித் தெரியப்படுத்தும் அவர்களது தேவைகளின் நேர் பிரதிபலிப்பாக அவர்களுக்கான சேவைகள் உள்ளூர் மட்டத்தில் வழங்கப் படுதல்.

(ஆ) மக்கள் தமது தேவைகள் கவனிக்கப்பெறுவதற்கு மாவட்டம் ஒன்றுக்கு அல்லது மாகாண நிலையம் ஒன்றுக்கு அல்லது தேசிய நிலையம் ஒன்றுக்கு செல்லாமல் தாம் வசிக்கும் இடத்துக்கு அண்மையிலேயே அவற்றைக் கவனிக்கப்பெறுதல்.

(இ) மக்களுக்கு அதிகரித்த அளவில் வகைகூறும் நிலையை ஏற்படுத்தல்.

(ஈ) மக்கள் அக்கறை கொள்ளும் விடயங்கள் பற்றிய தேசிய, மாகாண கொள்கையின் செயற்படுத்தலுக்கு உள்ளூர் மட்டத்தில் மார்க்கம் ஒன்றை ஏற்படுத்தல்.

2. மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பாதிப்பினை ஏற்படுத்தும் விடயங்கள், பணி-களில் அநேகமானவை அல்லது மக்கள் அரசாங்கத்துடன் கருமமாற்ற வேண்டிய விடயங்களில் அநேகமானவை அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் -

நீங்கள் அறிவீர்கள். அவ்வாறு பாரிக்கப்பட்டுள்ள இந்த விடயங்கள், பணிகளின் செயற்படுத்துகை வழக்கமாகப் பகுதிச் செயலாளர் மட்டத்தில் செய்யப்படுகிறது. பகுதிச் செயலாளரே உண்மையில் மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரியாக உள்ளார். பிரதான செயலாளர்கள் தமது மாகாணத்தில் உள்ள நிருவாக எந்திரத்தின் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்து வருகிறார்கள். இந்த மீளாய்வின் குறிக்கோள்களில் ஒன்று செயல் சாத்தியமான அனைத்தும் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதாகும்.

3. பகுதிச் செயலாளர் இப்போது மாகாண சபையின் பகுதியில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகப் பணியாற்றுகிறார். இதற்கு மேலாக அவர் மாகாண சபைகளிடம் பாரிக்கப்படாத, முன்னர் அரசாங்க அதிபர் நிறை-வேற்றிய சில பணிகளையும் நிறைவேற்றும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளார். இப்போது அவர் பாரிக்கப்படாத சில விடயங்கள் தொடர்பில் சில முக்கியப் பணிகளை நிறைவேற்றுவதில் பகுதி மட்டத்தில் மேலதிகப் பொறுப்புகளை பொறுப்பேற்று முக்கிய பங்களிப்பைச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளார்.

4. பகுதி 1இல் அமைக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை முழுமையாகப் பெறுவதற்குப் பின்வரும் திறமுறையைக் கைக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) தற்போது மாவட்ட மட்டத்தில் செய்யப்படும் அரசாங்கப் பணிகள் அனைத்தையும் பகுதி மட்டத்துக்கு மேலும் பன்முகப்படுத்துதல்.

(ஆ) தற்போது நிறைவேற்று வரிசை அமைச்சுக்களால் அல்லது அரசாங்கத் திணைக்களங்களால் ஒன்றில் நேரடியாக அல்லது தேசிய மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் அல்லது மாவட்ட மட்டத்தில் அமைந்துள்ள அவற்றின் பிரதிநிதிகளால் தேசிய மட்டத்தில் செய்யப்படும், மக்களின் நாளாந்த வாழ்க்கையைத் தொட்டுச் செல்லும் தொழிற்பாட்டு முயற்சிகள் அனைத்தையும் பகுதி மட்டத்துக்குப் பன்முகப்படுத்துதல். பகுதிச் செயலாளர், பகுதியில் உள்ள அமைச்சு ஒன்றுக்கு அல்லது திணைக்களம் ஒன்றுக்கு முகமைப் பணி ஒன்றைச் செய்யும் அல்லது குறித்தவொரு சட்டத்தின் கீழ் அத்தகைய திணைக்களத்தின் பிரதித் தலைவராக நிறைவேற்று வரிசை அமைச்சினால் நியமிக்கப்பெற்றவ-ராக அச்சட்டத்தின் கீழ் தொழிற்படும் விடயங்கள் பணிகளைக் குறிக்கும் கூற்று ஒன்று நான் இத்துடன் இணைத்துள்ளேன்.

5. புதிய பன்முகப்படுத்திய முறைமையைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம், தற்போது அரசாங்க அதிபர்கள் செய்யும் பணிகளையும் அட்டவணை 1 இல் வரிசை அமைப்புகளில் இனங்காணப்பட்டுள்ள பணிகளையும் பகுதிச் செயலகங்-களுக்குப் பன்முகப்படுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது. இப்பணிகள் பன்முகப்படுத்தப்படுவதை அடுத்து, அத்தகைய விடயங்களைக் கையாளும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பணிகளைப் புரிவதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், தளபாடம், உபகரணங்கள் ஆகியவற்றுடன் மாவட்ட மட்டத்துக்கு

மீளப் பணிக்கமர்த்தப்படுதல் வேண்டும். வரிசை அமைச்சுக்கள் யாவற்றினதும் செயலாளர்களும் அரசாங்க அதிபர்களும் இந்தத் தீர்மானத்தைக் கீழே 12 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள கால அட்டவணையைக் கருத்திற் கொண்டு செயற்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு பகுதிச் செயலகத்துக்கும் உரிய பதவியணியும் பதவியினரது வேலைப் பொறுப்புக்களும் இந்த அமைச்சினால், வரிசை அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றுடன் உசாவுகை மேற்கொண்டு தீர்மானிக்கப்படும்.

6. மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபரை அநேகமாகப் பதிலீடு செய்யும் பகுதிச் செயலாளர் அரசாங்கம், மாகாண சபை, உள்ளூர் அதிகார சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்து இணைந்து தொழிற் படுதல் வேண்டும்.

7. தொடக்க நிலையாக, 1991 இல் தேர்தல்கள் நடத்தப்பட்ட 195 பிரதேச சபைகளுக்கு பகுதிச் செயலகங்கள் தாபிக்கப்படும். மாநகராட்சி மன்றங்களும்பட்டின ஆட்சி மன்றங்களும் தமது சொந்தச் செயலகங்களை ஏலவே தாபித்துள்ளதனால் அவற்றுக்குப் பகுதிச் செயலகங்களைத் தாபிக்கும் உத்தேசம் இல்லை. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச சபைகளுக்கு பாதுகாப்பு நிலைமைகள் அங்கு சீரடைவதற்கு அமைய, மாகாணச் செயலகங்கள் தாபிக்கப்படும்.

8. அநேக சந்தர்ப்பங்களில் பிரதேச சபைகளின் அதிகாரப் பிரதேசம் தற்போதுள்ள பகுதிச் செயலாளர்கள் பகுதிகளின் தொழிற்பாட்டுப் பிரதேசத்துடன் இசைந்து செல்கிறது. சில சந்தர்ப்பங்களில் இரண்டு எல்லைகள் ஒன்றின் மீது ஒன்று செல்வதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் பிரதான செயலாளர்கள் அதனை அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிப்பதன் நோக்கம், தற்போதுள்ள பிரதேச சபைகளின் அடிப்படையில் பகுதிச் செயலாளர்களது பகுதிகளை மீள எல்லை குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்க உதவுவதாகும். ஒரு பிரதேச சபைப் பகுதியில் இரண்டு பகுதிச் செயலாளர் அலுவலகங்கள் இருக்குமிடத்து ஒரு அலுவலகம் பகுதிச் செயலகத்தின் உப - அலுவலகமாக மாற்றப்படும். ஒரு பகுதிச் செயலாளரது பகுதியில் இரண்டு பிரதேச சபைகள் இருக்குமிடத்து, இரண்டு பிரதேச சபைகளும் இரண்டு பகுதிச் செயலகங்களாகத் தாபிக்கப்படும்.

9. பகுதிச் செயலகத்தின் சகல அங்க அலுவலகங்களையும் ஒரே கூரையின் கீழ் இடமமைப்பது மிகப் பொருத்தமானது. எனினும் தற்போதைக்கு அதனைச் செய்ய இயலாது இருக்கக்கூடும். இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் இடமமைப்பது அல்லது அதே பகுதியினுள் இடமமைப்பது ஆகும். ஆதலின் அரசாங்கம் இந்த நோக்கத்துக்கு அதே பகுதியினுள் உள்ள பொருத்தமான அரசாங்கக் கட்டிடங்களைத் தெரிவு செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கக் கட்டிடங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து

பொருத்தமான தனியார் கட்டிடங்கள் வாடகைக்கு எடுக்கப்படுதல் வேண்டும். வாடகைக்குத் தனியார் கட்டிடங்களும் கிடைக்கப்பெறாதவிடத்து ஓரளவு நிரந்தரக் கட்டிடங்களைத் தற்போதைக்கு அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பிரதான செயலாளர்கள் இந்த நெறிமுறைகளைப்பின்பற்றி இந்த அமைச்சுடன் உசாவுகை மேற்கொண்டு பகுதிச் செயலகங்களுக்கு இடவசதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது சம்பந்தமாகப் பிரதான செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் பகுதிகளில் பயன்படுத்தப்படாதிருக்கும் அரசாங்கக் கட்டிடங்களும் காணிகளும் என்ற தலைப்பில் கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் தகவல் செய்தித் திரட்டினை படித்துப் பார்க்குமாறு அறிவுரை கூறுகிறார்கள்.

10. மேற்குறித்த நிறமுறையைச் செயற்படுத்துவதற்கு மிக மிக முக்கியமாக இருப்பது பகுதி மட்டத்தில் உள்ள பகுதிச் செயலகத்தினை மீளமைப்பதும் ரூபா. 72,000-3,600 10-108,000 என்ற வேதன அளவுத் திட்டத்தில் உள்ள வகுப்பு 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரைப் பகுதிச் செயலாளரெனப் பதவிப் பெயர் சூட்டி இந்த அலுவலகத்துக்குப் பொறுப்பாக நியமிப்பதும் ஆகும். அவருக்கு, இந்த மட்டத்துக்குப் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளைக் கையாளும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உதவுவர். பகுதிச் செயலாளர் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவார். பகுதியில் அவரது பணியும் நிலையும் மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபருக்குத் தற்போதுள்ள அதே நிலையை ஒத்ததாக இருக்கும்.

11. மேலே குறிப்பிட்ட விதத்தில் அரசாங்கப் பணிகள் பன்முகப்படுத்தப்படுவதன் விளைவாக கச்சேரிகள் மறைந்து போகும். அத்துடன் மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபர் நிறுவனமும் இல்லாது போகும். எனினும் மாவட்டம் பாராளுமன்றத் தேர்தல்களுக்கும் மாகாண சபைத் தேர்தல்களுக்கும் தேர்தல் தொகுதியாக விளங்குமாதலால் மாவட்ட மட்டத்தில் முயற்சிகளைக் கூட்டிணைக்கும் தேவை உள்ளது. இதற்கமைய மாவட்டக் கூட்டிணைப்புக் குழு தொடர்ந்து தொழிற்படும். அரசாங்கம் சிரேட்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரை, சிறிய பதவியினர் குழும் ஒன்றுடன், மாவட்டக் கூட்டிணைப்புக் குழுவுக்குச் சேவையாற்றுவதற்கு நியமிக்கும்.

12. புதிய முறைமையில் செயற்படுத்துகையை 1992 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

13. மேற்குறித்த தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.

எம். என். ஜுனைட்,
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

வரிசை அமைச்சுக்களிலிருந்து பிரதேச மட்டத்துக்குப்
<u>பன்முகப்படுத்துவதற்கென இனங்காணப்பட்ட பணிகள்</u>

<u>விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சு</u>

1. பகுதிச் செயலாளர், பின்வருவனவற்றைக் கவனிப்பதற்காக, கமநலச் சேவைகள் பிரதி ஆணையாளராக நியமிக்கப்படுவார்.

(அ) விவசாயக் காணிகள் பயன்தரு வகையிலும் முறைப்படியும் செய்கை பண்ணப்படுவதை உறுதிப்படுத்தல், தவறானவர்களுக்கு எதிராக தண்ட நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களைக் கமநலச் சேவைகள் ஆணையாளர்களுக்கு அறிவித்தல்.

(ஆ) பயன்விளைவற்ற முறையிலும் முறையற்ற விதத்திலும் செய்கை பண்ணியதற்காகக் காணி பொறுப்பேற்கப்பட்டவிடத்து அத்தகைய காணியை குத்தகைக்குக் கொடுக்கக்கூடிய ஒரு ஆளை கமநலச் சேவைகள் ஆணையாளருக்குச் சிபாரிசு செய்தல்.

(இ) கமநலச் சேவைகள் சட்டத்தின் கீழ் பேணப்படும் விவசாயக் காணி இடாப்புகளை பேணி நாளதுவரைப்படுத்தல்.

(ஈ) நெற்செய்கைக்குரிய காணியைப் பிற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல்.

11. விவசாயக் கொடுகடன் திட்டத்தினைச் செயற்படுத்தி விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல்.

111. மரம் வெட்டல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பலா மரங்களை வெட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சுக்குச் சிபாரிசு செய்தல்.

<u>புத்த சாசன அமைச்சு</u>

(அ) தம்ம பாடசாலைகளைப் பதிவு செய்தல்

(ஆ) பௌத்த சங்கங்களைப் பதிவு செய்தல்

(இ) பௌத்த கோவில்கள், பிக்குகள், தசசில் மாதாக்களின் இடாப்பு ஒன்றைத் தொகுத்தல்.

(ஈ) பிரதேச "சாசனாரக்ஷக மண்டலயாக்கள்" ஐ அமைத்து மேற்பார்வை செய்தல்.

(உ) பௌத்த வணக்கத் தலங்கள், தம்ம பாடசாலைகள், பிக்குகள் கல்வி நிலையங்கள் போன்றவற்றின் அபிவிருத்திக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கிய ட.சி.பீ. நிதியங்களைப் பயன்படுத்தி வேலைத்திட்டங்களை வகுத்தமைத்துச் செயற்படுத்துதல்.

(ஊ) பௌத்த கோவில்களை அபிவிருத்தி செய்வதற்கு சனாதிபதி நிதியம், பௌத்த அறவலிகள் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து நிதியுதவி வழங்கு-வதற்கு விண்ணப்பங்களைச் சீரிடுதல்.

(எ) கோவில் காணிகளை குத்தகைக்கு விடுவதற்கான யோசனைகளை அறிவித்தல்.

(ஏ) பௌத்த கோவில்களிலுள்ள "விஹாரஸ்தன கார்ய சாதன" நிதியக் கணக்குகளை ஆய்வு செய்தல்.

(ஐ) இந்தியாவுக்கான பௌத்த யாத்திரைகளுக்கு ஆதரவளித்தல்.

(ஒ) பிக்குகளின் நலனோம்பல் வசதிகளை மேம்படுத்தல்.

(ஓ) தம்ம பாடசாலைகளுக்கு பாடப் புத்தகங்களையும் பிற தேவைப் பொருள்களையும் வழங்குதல்.

(ஔ) "தசசில் மாதாக்கள்" இன் கல்வியையும் பிற நலன்களையும் மேம்படுத்தல்.

## கலாசார அலுவல், தகவல் அமைச்சு

(அ) பகுதிச் செயலாளர், கலாசார அலுவல்; தகவல் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்படுவார்.

(ஆ) தொல்பொருள்களை அகழ்ந்தெடுப்பதற்கு உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவதற்கும் தொல்பொருள் ஒதுக்கங்களில் அத்துமீறுவோரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் தொல்பொருள் ஆணையாளருக்கு பகுதிச் செயலாளர் விதப்புரை வழங்குவார்.

(இ) புராதன, கலாசார ஆதனத்தைக் கட்டுக்காப்பில் வைத்துப் பேணுவதற்கு பிரேரணைகளை வழங்குதல்.

(ஈ) கலாசார அபிவிருத்திப் பிரேரணைகளை வகுத்தமைத்தல்.

(உ) கலைகள், கைப்பணிப் பொருள்கள் பற்றிய இலக்கிய வைபவங்கள், கருத்தரங்குகள், செயலரங்குகள், மகாநாடுகளை ஒழுங்கு செய்தல்.

(ஊ) கலாசாரப் பாரம்பரியங்களை பேணுவதற்கு உதவி வழங்குதல்.

(எ) உள்ளூர் நாடகக் குழுக்களைப் பராமரிப்பதற்கு உதவுதல். இலம்பாடுள்ள கலைஞர்களுக்கு உதவுதல். தேசிய மட்டத்துக்கு கலைஞர்களை அறிமுகஞ் செய்தல். "கலாபூஷணம்" விருதுக்குப் பெயர்களைக் குறித்தல்.

(ஏ) தேசிய வீரர்களை நினைவு கூருதல்.

(ஐ) கிறிஸ்தவ சமய முயற்சிகளில் ஒத்துழைத்தல்.

(ஒ) முஸ்லிம் நலன்புரிச் சங்கங்கள், அகதியா பாடசாலைகள், கொரான் மத்ரசாக்கள், ஹிப்ழு கொரான் மத்ரசாக்கள், முன்-பாடசாலைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல்.

(ஓ) இந்து மத பூசகர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல், இந்து சமய வைபவங்களை நடாத்துவதற்கு உதவுதல்.

(ஔ) ஆண்டு சாகித்திய உற்சவத்தை ஒழுங்கு செய்ய உதவுதல், தமிழ் நாடகம், இசை, நுண்கலை ஆகியவற்றை மேம்படுத்துதல்.

(ஃ) நிருபர்கள் மகாநாடுகளை ஒழுங்கு செய்வதற்கும், துண்டுப்பிரசுரங்கள், செய்தித் திரட்டுகளை விநியோகிப்பதற்கும் அரசாங்க வெளியீடுகளை விற்பதற்கும், அரசாங்க முயற்சிகளைப் படம் பிடித்துக் காட்டுவதற்கும் பிரசாரக் கூறுகளை அமைப்பதற்கும் தகவல் திணைக்களத்துக்கு உதவுதல்.

## பாதுகாப்பு அமைச்சு

(அ) ஆட்பதிவுச் சட்டத்தின் கீழ் அடையாள அட்டைகளை வழங்குவதற்கும், குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கும் விண்ணப்பங்களைச் சீரிடுதல்.

(ஆ) தனியார் பாதுகாப்பு முகமைகளைப் பதிவு செய்தல்.

(இ) செயலில் இறக்கும் படைவீரர்களது குடும்பங்களுக்கு மரணப் பணிக்கொடை வழங்குதல்.

(ஈ) பாதுகாப்புச் செயலாளரது அதிகாரத்தின் பேரில் வெடிபொருள்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

<u>கல்வி உயர்கல்வி அமைச்சு</u>

பரீட்சைகளை நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு உதவுதல்.

<u>சூழல், பாராளுமன்ற அலுவல் அமைச்சு</u>

பகுதி மட்டத்தில் தேசிய சுற்றாடல் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கு உதவுதல். சுற்றாடல் விடயங்களில் பொது விழிப்புணர்வினை உருவாக்குதல்.

<u>நிதி அமைச்சு</u>

(அ) டி.சி.பீ. காணி கொள்ளல், உணவு முத்திரை, சமய அமைப்புக்களுக்கான உதவி, மதிய நேர உணவு, புனர்வாழ்வளிப்பு, சனசக்தி போன்றவற்றுக்கு திறைசேரி வழங்கும் நிதியங்களை முகாமை செய்தல்.
(ஆ) பிரதிச் சுங்கச் சேகரிப்பாளராகப் பணிபுரிதல்.
(இ) உயர்ந்த பெறுமதியுள்ள முத்திரைகளை விற்றல்.
(ஈ) மதுபான உத்தரவுப் பத்திரங்களை வருடாந்தம் புதுப்பித்தல். தவறணைகளை வருடாந்தம் விற்றல்.

<u>கடற்றொழில் நீர்வள அமைச்சு</u>

(அ) பின்வருவனவற்றைக் கவனிக்கும் முகமாக பகுதி செயலாளர் கடற்றொழில் கட்டளை சட்டத்தின் கீழ் கடற்றொழில் நீர்வள பிரதிப்பணிப்பாளராக நியமிக்கப்படுவார்.

  (1) மீன்பிடி வள்ளங்களின் பதிவை வருடாந்தம் புதுப்பித்தல்.
  (2) மீன்பிடி அனுமதிக்கத்தக்க இடம், பிடிக்கும் மீன்களின் இனம், பயன்படுத்தும் மீன்பிடி உபகரணம், மீன்பிடிப்பதற்கான காலம், போன்ற விசேட முறைகள் தொடர்புற்ற நன்னீர் மீன்பிடி ஒழுங்கு விதிகளின் கீழான ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தல்.

(ஆ) கடற்றொழில் விரிவாக்க வேலைகளை மேற்பார்வை செய்தல்.
(இ) மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிப்பணம், வங்கிக் கடன் கொடுப்பனவுக்குச் சிபாரிசு செய்து அதன் முறையான பயன்படுத்துகையை கண்காணித்தல்.
(ஈ) கடற்றொழில் பிணக்குகளை விசாரணை செய்து தீர்த்து வைத்தல். தீர்வு ஒன்று சாத்தியப்படாவிடத்து நிகழ்வுகளைக் கடற்றொழில் பணிப்பாளருக்கு அறிவித்தல்.
(உ) மீனவர் குடும்பங்களுக்குத் தேவையான வசதி நலன்களை இனங்காணல், அவர்களின் உயர்வுக்கு உகந்த யோசனைகளைச் சமர்ப்பித்தல், நிதியைப் பெறல், ஏதாவது நிருமாண வேலைகளை மேற்பார்வை செய்தல்.
(ஊ) கடற்றொழில் துறைமுகங்கள் ஒப்புரவாகப் பேணப்படுவதையும் அவற்றுக்கு வெளிச்சம், குடிநீர் போன்ற வசதிகள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல்.

உணவு கூட்டுறவு அமைச்சு

(அ) மாவு விநியோகம்

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு

(அ) ஆயுர்வேத மருத்துவ தொழிலாளர்களுக்கு அபின் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கல்.

கைத்தொழில், விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சு

(அ) சுரங்க, கனிப்பொருட் சட்டத்தினைச் செயற்படுத்தல்

நீதி அமைச்சு

(அ) நீதி மன்றத் தண்டப் பணங்களைச் சேகரித்தல்
(இந்த நோக்கத்திற்கு அவசரகால ஒழுங்குவிதிகள் செயற்படுத்தல்)
(ஆ) நீதிமன்றங்களிலிருந்து அழைப்பாணைகளையும் நடுத்தீர்ப்புச் சபைகளிடமிருந்து அறிவித்தல்களையும் கிராம உத்தியோகத்தர்கள் வழங்குதல்.
(இ) நடுத்தீர்ப்பு சபைகள் தொழிற்பட வசதிகளை ஏற்படுத்தல்.
(ஈ) நீதிமன்ற மனையிடங்களைப் பராமரித்தல்.

தொழில், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு

(அ) வாழ்க்கை தொழில் பயிற்சி நிலையங்களின் முகாமைக்கு உதவுதல்.
(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு தகவல்களை வழங்குதல்.
(இ) ப.எ.நீ/ப.ந.நி. படிவங்களை விநியோகித்தல்.

காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சு

(அ) ஒவ்வொரு பகுதியிலும் அமைக்கப்படும் காணி திட்டமிடல் குழுவுக்கு பகுதிச் செயலாளர் தலைவராக இருப்பார்.
(ஆ) நீண்டகாலக் குத்தகைக்கான விண்ணப்பங்களைச் சீரிடுதல்; காணி ஆணையாளருக்கு விதப்புரைகளை வழங்குதல்; குத்தகை முறியை வழங்குவதற்கு ஆவணங்களைத் தயாரித்தல்.
(இ) காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் கொள்ளல் உத்தியோகத்தராக தொழிற்படுதல்
(ஈ) அரசாங்கக் காணியை அளப்பதற்குத் தேவைப்பட்டவையை வழங்குதல்.
(உ) அரசாங்கக் காணி (உடைமை மீளப்பெறல்) சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியாகத் தொழிற்படல்.
(ஊ) அமைச்சின் அதிகாரத்தின் பேரில் தனியார் காணிகளில் இருந்து மரத்தை ஏற்றிச் செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கல்.
(எ) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உதவுதல்.
(ஏ) நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக் கூட்டங்களை நடத்துதல்.
(ஐ) [illegible]

கொள்கைத்திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சு

(அ) ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.
(ஆ) புள்ளிவிபரங்களைச் சேகரித்தல்
(இ) பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்ட நிதியங்களைப் பயன்படுத்திச் செயற்படுத்தப்பெறும் வேலைத் திட்டங்களை இனங்காணல்.

துறைமுக, கப்பற் சேவை அமைச்சு

(அ) கரையோரப் பாதுகாப்பு (திருத்தல்) சட்டத்தின் கீழ் மண் அகற்றுவதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கல்.
(ஆ) கரையோர வலய முகாமைத்திட்ட வழிநெறிகளுக்கு அமைய 3000 சதுர அடிக்குக் குறைந்த வதிவுக் கூறுகளை நிருமாணிப்பதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்.
(இ) கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அரச கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மூலப் பொருள்களைப் பெறுதல்.

மின்சார சக்தி அமைச்சு

(அ) மூன்றாம் தரப்பினர் காணிக்கு மேலாக மின்சாரம் வழங்குவது தொடர்புற்ற ஆட்சேபனைகள் பற்றி விசாரணை மேற்கொள்ளல்.
(ஆ) நுகர்வோர் வேண்டுகோள்களைக் கையாளுதல்.

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

(அ) பிறப்பு, விவாக, இறப்பு பதிவின் பொருட்டு பகுதியினுள் மாவட்டப் பதிவாளராகப் பணிபுரிதல்.
(ஆ) ஓய்வூதியங்கள் கொடுத்தல்
(இ) அரசாங்கக் கட்டிடங்களை ஒதுக்கீடு செய்தல், வாடகை சேகரித்தல், குடியிருப்பாளரை வெளியேற்றுதல், கட்டிடங்களைப் பராமரித்தல்.
(ஈ) தேசிய கௌரவங்கள் வழங்குவதன் பொருட்டு சனாதிபதி செயலகத்துக்குப் பெயர்களைச் சமர்ப்பித்தல்.

புனர்நிருமாண, புனர்வாழ்வளிப்பு, சமூக நலனோம்பல் அமைச்சு

(அ) இடம் பெயர்ந்த ஆட்களை மீளக்குடியமர்த்துதல். அத்தகைய ஆட்களுக்கு ஒன்றிணைந்த உதவித் திட்டத்தைச் செயற்படுத்துதல், பாதிப்புற்ற குடும்பங்களை மீள இடமமர்த்தி அவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.
(ஆ) பரந்துபட்ட இலம்பாடு, இடர், வெள்ளம், வரட்சி, சூறாவளி, தீ விபத்து, மண்சரிவு, தொற்றுநோய் போன்றவற்றுக்கு நிவாரணம் வழங்குதல்.
(இ) அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட நகரங்கள், கிராமங்கள், அரசாங்க நிலையங்கள், ஆலயங்கள், கைத்தொழில் தாபனங்கள்

....../11

மீள் நிலைப்படுத்தல், மீள் நிருமாணித்தல், மறுசீரமைத்தல், தொடர்புற்ற விடயங்களும் பாதிப்புற்ற ஆதனங்களின் உடைமையையும் குடியுரிமையையும் பாதுகாத்தலும்.

(ஈ) பாதிப்புற்ற ஆட்களுக்கு "ரெப்பியார்" கடன்கள், விவசாய, கடற்றொழில் நோக்கக் கடன்கள் போன்றவற்றை விதந்துரைத்தல்.

(உ) சமூக நலனோம்பல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க சார்பற்ற அமைப்புக்களின் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்தல். கட்டிணைத்தல்.

(ஊ) உணவு முத்திரைத் திட்டத்தைச் செயற்படுத்தல்.

<u>சுற்றுலா, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு</u>

(அ) சுற்றுலா விருந்தகங்கள், பணம் செலுத்தும் விருந்தினர் இடவசதிக் கூறுகள், சுற்றுலா உணவகங்கள், சுற்றுலாக் கடைகள் ஆகியவற்றைப் பதிந்து உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

(ஆ) பிரதேச சுற்றுலா வழிகாட்டு விரிவுரைஞர்கள், தேசிய சுற்றுலா வழிகாட்டு விரிவுரைஞர்கள், ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கு ஒழுங்கு செய்தல்.

(இ) வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சுற்றுலாச் சபைத் தலைவருக்கு விதப்புரை வழங்குதல்.

(ஈ) சுற்றுலா அபிவிருத்தித் தானங்களை இனங்கண்டு சுற்றுலாச் சபையின் தலைவருக்கு சாத்தியமான வேலைத்திட்டங்கள் பற்றி விதப்புரை வழங்குதல்.

(உ) சுற்றுலாத் தொடர்புற்ற கவர்ச்சிகள் யாவற்றினதும் பட்டியலைத் தயாரித்தல். மக்களிடையே சுற்றுலா பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.

(ஊ) பயணிகளின் நலன்களைக் கவனிப்பதோடு அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

<u>வியாபார வர்த்தக அமைச்சு</u>

(அ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், எடைகள், அளவுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு பகுதிச் செயலாளர் பிரதி ஆணையாளராக நியமிக்கப்படுவார்.

(ஆ) நுகர்வோர் கல்வி.

..../ 12

<u>போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு</u>

(அ) பின்வருவனவற்றைக் கவனிப்பதற்காக பகுதிச் செயலாளர் மோட்டார் போக்குவரத்து பிரதி ஆணையாளராக நியமிக்கப்படுவார்.

(1) சாரதிகள் உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு விண்ணப்பகாரரைச் சோதித்துப் பார்த்து மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு விதப்புரை வழங்குதல்.

(2) மோட்டார் சயிக்கிளைப் பதிவு செய்து பதிவு ஆணையாளருக்கு அறிவித்தல். (மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஒவ்வொருவரும் பயன்படுத்துவதற்கான இலக்கங்களை ஒதுக்கீடு செய்வார்.)

(3) மோட்டார் வாகனங்களின் உரிமை மாற்றத்துக்கு விண்ணப்பங்களை ஏற்று ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல்.

<u>இளைஞர், விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு</u>

(அ) வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையங்களில் தரம் பேணப்படுவதை அவதானிப்பதில் மூன்றாம் நிலை வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவுக்கு உதவுதல்.